தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1979 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பூவாணி அரசுப் பழத் தோட்டம்.

குறுகிய கால வினா எண் 19—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள பூவாணி அரசுப் பழத் தோட்டம் லாபத்தில் நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில் அப்பழத் தோட்டத்தை மேலும் விரிவாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) நடப்பு நிதி ஆண்டில் இலாபத்தில் நடந்து வருகிறது.

(ஆ) இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, பழப்பண்ணை எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? ஆரம்பித்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு நட்டத்தில் ஓடியது? அந்தப் பழப் பண்ணையை விஸ்தரிக்க வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, கடந்த 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே இந்தப் பழப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பழப் பண்ணையினுடைய விஸ்தீரணம் 23 ஏக்கர் 65 சென்ட். கடந்த 1973 லேயிருந்து 1978 வரையிலும் அது நஷ்டத்திலே இயங்கி வந்தது. 1978–79 லேதான், அதாவது இந்த வருஷம்தான் ரூ. 56,156 இலாபத்தை எட்டியிருக்கிறது. இந்தக் காரணங்களை

யெல்லாம் முன்வைத்து இந்தப் பழப் பண்ணையை விஸ்தரிக்கின்ற நோக்கத்தோடும் அதே நேரத்தில் நிரந்தரமாக்கவும் இந்த அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பழப் பண்ணையைப் பொறுத்தவரை பழம் கிடைத்ததிலிருந்து இலாபம் கிடைத்து வருகிறது, சரிதான், 1978-லிருந்து சரிதான், அதே போல், பக்கத்திலே மேலப்பட்டியிலே, அதிகமான நிலம் அரசுக்குச் சொந்தமாக இருக்கிறது. அந்த நிலம் பழத்தோட்டம் அமைப்பதற்கு சவுகரியமான நிலம் என்று சொல்லப்பட்டது. அங்கு பழத் தோட்டம் வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பழப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது 1965-ம் ஆண்டு. 1973-லே இருந்து பழம் கிடைக்கப் பெற்றது. ஆனாலும் 1977-78 வரையிலும் நஷ்டத்திலேதான் ஓடியது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் இலாபம் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. மேலும், பக்கத்திலே இருக்கிற நிலங்களை எடுத்து, பண்ணையை விஸ்தரிக்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து தள்ளி வைக்கப்பட்ட வினா......

திரு. என். கிட்டப்பா : பாய்ன்ட் ஆப் ஆர்டர், தள்ளிப் போடப்பட்ட வினாக்களைப் பற்றி, கைத்தறி துணி தேங்கிக் கிடப்பது பற்றி இன்றைய தினம் எடுத்துக் கொள்வதாக மாண்புமிகு தலைவராகிய நீங்கள் அறிவித்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிப் போடப்படுகிறது என்று தான் சொன்னேன், இன்றைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லவில்லை.

திரு. என். கிட்டப்பா : மன்னிக்கவும், இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிப் போடப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

திரு. என். கிட்டப்பா : நான் சொல்வது தவறாக இருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.